12/8 II Main Road,
RAPuram 4956691

# காயத்ரீ



30வது பீடாதிபதி
**ஸ்ரீமத் பரமஹம்ஸேதி**
**ஸ்ரீ கலியன் வானமாமலை**
**ராமானுஜ ஜீயர் ஸ்வாமி**



ஸ்ரீ. உ.வே. காரப்பங்காடு
வேங்கடாசாரியார் **ஸ்வாமி**

## உபநயனம்

சிரஞ்சீவி : **ஸ்ரீனிவாசன்**

**25-4-2002**

# காயத்ரீ

ஸ்ரீ. உ.வே. மஹாவித்வான் காரப்பங்காடு வேங்கடாசாரியர் ஸ்வாமி ஸாதித்த உபன்யாஸத்தில் எடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு டாக்டர் வி.வி.ராமாநுஜன் எழுதியது.

''த்ரைவர்ணிகா: த்விஜா:'' என்கிறபடியே ஸர்வேச்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட குலநான்கு சாதிகளில் முதல் மூன்று வருணத்தவர் இரு பிறப்பாளர் என்னப்படுகின்றனர். தாய் வயிற்றில் பிறப்பது முதல் பிறப்பு “கர்மணா ஜாயதே த்விஜ:” என்கிறபடி ஸம்ஸ்கார மடியாக மறுபிறப்பு ஏற்படுகிறது. பிராம்மண வருணத்தில் பிறவியாலேயே ஒருவன் பிராம்மணனாவதில்லை. உபநயனம் என்ற ஸம்ஸ்காரமான பின்பே பிராம்மணனாகிறான். வேதமோதுவதற்கும் பிரம்மஜ்ஞாநம் பெறுவதற்கும் தகுந்த ஆசார்யனைக்கிட்ட, அவனால் பிரம்மத்தின் அருகில் அழைத்துச் செல்லப்படுவதே உபநயனம். உபநயனம் என்ற சடங்கு நிறைவேறியதும் பிள்ளையை “பிராம்மணனானாயா?” என்று வினவுவது சான்றோர் வழக்கம். உபநயனத்தில் முக்கியமான அங்கம் ,காயத்ரீ மந்த்ரோபதேசம். இது கர்ப்பாஷ்டமத்தில் அதாவது பிள்ளைக்கு 8 வயது நிறம்புமுன் செய்யப்படவேண்டும். பத்து வயதுக்குமேல் உபதேசிக்கப் பட்டால் மந்த்ரம் உபதேசம் பெறுபவனிடம் விருப்பத்துடன் புகுருவதில்லை; பதினைந்தாவது வயதுக்கு மேல் உபநயனம் பண்ணுவது வ்யர்த்தம், பயனற்றது என்று சாஸ்த்ரம்.

உபநயனம் ஆனதிலிருந்து வாழ்நாள் பூறாவும் தினமும் மூன்று வேளையும் ஸந்த்யாவந்தனம் பண்ணி காயத்ரீ ஜபத்தை முறையாகச் செய்யவேண்டுமென்று பகவதாஜ்ஞை. இதைச்செய்யாவிடில் அவனுடைய நிக்ரஹத்துக்கு ஆளாகவேண்டியிருக்கும்; செய்யாதவன் வைதீக கர்மம் எதையும் அநுஷ்டிக்க யோக்யதை யில்லாதவனாகவும் ஆகிறான். காயத்ரீ மந்த்ரத்தை 100 தடவையாவது ஜபிப்பது நலம். அதமபக்ஷம் 10. தடவையாவது ஜபிக்கவேண்டும். “த்யாத்வா தேவம் ஜபேத் மநும்” என்பது முறை. பரமபுருஷனை

த்யானம் பண்ணிக்கொண்டு மந்த்ரத்தை உச்சரித்து ஜபம் பண்ணவேண்டும். இந்த மந்த்ரத்தைப் பிறர் காதில் படும்படி சொல்லக் கூடாது. உபநயனத்தின்போதும் பிள்ளையைத் திரையிட்டு மறைத்துக்கொண்டு தகப்பனாரும் உபாத்யாயருமாக உபதேசம் பண்ணுவதை நாம் காண்கிறோம். திருவஷ்டாக்ஷரத்தை ஸதஸ்ஸில் பெரியோர் வாய்விட்டுச் சொல்வதுண்டு. காயத்ரீயைச் சொல்லவதில்லை. இது இந்த மந்த்ரத்தின் பெருமைக்குச் சேர உள்ள ஆசாரம்.

இந்த மந்த்ரம் ஸகலவேதங்களுக்கும் தாய். "காயத்ரீ சந்தஸாம் மாதா" என்று ப்ரஸித்தம். சந்தஸ்ஸுக்களில் ப்ரதானமானது என்னவுமாம். "காயந்தம் த்ராயதே இதி காயத்ரீ" என்று காயத்ரீ சப்தத்துக்கு சிலர் வ்யுத்புத்தி கூறுவதுண்டு. ஒவ்வொன்றும் 8 அக்ஷரங்கள் உடையதான 3 வாக்கியங்களால் அமைந்துள்ளது இந்த மஹா மந்த்ரம். மொத்தம் 24 அக்ஷரங்கள் கொண்டது. ப்ரணவத்தையும், பூர்ப்புவஸ்ஸுவஃ என்ற வ்யாஹ்ருதியையும் சேர்த்து ஜபம் பண்ணுகிறோமாயினும் பின்வரும் மூன்று வாக்யங்களே காயத்ரீ மந்த்ர ஸ்வரூபமாகும். பலர் பலபடியாக விளக்கம் கூறினும்.

> **"எந்த பரமபுருஷன் நமது ஞானங்களைத் தூண்டி நடத்துகிறானோ, ஜகத்காரணனும் தேஜோமயனுமான அந்த புருஷோத்தமனை த்யானிக்கிறோம்"**

என்பதே இந்த மந்த்ரத்தில் திரண்ட பொருளாகும்.

இந்த மந்த்ரத்தில் "வரேண்யம்" என்றும் "வரேணீயம்" என்றும் இரண்டு பாடங்கள் ஆதரிக்கப்படுகின்றன. ஜபத்தில் வரேணீயம் என்ற பாடமும், அர்க்யப்ரதானம் போன்ற இதர இடங்களில் வரேண்யம் என்ற பாடமும் கொள்ளத்தக்கவை என்பர் பெரியோர். "தேவஸ்ய ஸவிதுஃ தத் வரேணீயம் பர்க்கஃ தீமஹி" என்று முதல் இரண்டு வாக்யங்களின் பதங்களை அன்வயம் பண்ணவேண்டும். தேவ:-ஜகத் வ்யாபாரமாகிற விளையாட்டினால் ஆனந்தப்படுபவன்; ஸவிதா -ஆதிகாரணன்; யாவருக்கும் நன்மையே செய்பவன்; வரேணீயம் - விரும்பத்தகுந்தது; பர்க்க:-தேஜஸ்; தீமஹி -த்யானிக்கக் கடவோம்ஃ இப்படி பதங்களின் அர்த்தம். "விளையாடி

ரமிப்பவனும், ஜகத்காரணனானவனுமுடைய அந்த விரும்பத்தகுந்த தேஜஸ்ஸை த்யானிக்கக்கடவோம்'' என்று அக்ஷரங்களின் மேல் பொருள் கிடைக்கிறது.

இந்த மந்த்ரத்தினால் தேறுவது நிர்க்குண ப்ரஹ்ம உபாஸனை என்பர் அத்வைதிகள். சிவனே இதில் உபாஸிக்கப்படும் தெய்வம் என்பர் சைவர். ஸ்ரீமந் நாராயணனே த்யானத்துக்கு விஷயம் என்பர் ஸ்ரீவைஷ்ணவர்கள்.

முதலில் சைவ வாதத்தைக் கவனிப்போம். நிகண்டுகளில் (சொல்அகராதி) பர்க்க: என்பது சிவனுடைய பெயர்களில் ஒன்று என்று காணலாம். தேஜஸ்ஸைக்குறிக்க பர்க்க சப்தம் ப்ரயோகிக்கப்பட்டதால் சிவனையே இந்த மந்த்ரம் சொல்லும் என்பது சைவவாதம். இது ஸம்ஸ்க்ருத இலக்கணத்துக்குச் சேராது. சிவன் என்ற தெய்வத்தைப் பொருளாகக் கொள்ளவேணுமானால் ராம என்ற சப்தம்போல் சிவ என்ற சப்தமும் அ என்று முடிவுடைய ஆண்பாலான பதமாதல் வேண்டும். அப்படியே பர்க்க பதமும் ஆகவேண்டும். சொல்வடிவம் இப்படியானால், இலக்கணமுறைப்படி வாக்யம், ''தம் வரேணியம் பர்க்கம்'' என்று அமையவேண்டும். ''தத்வரேணியம் பர்க்க:'' என்னுமிடத்து, இலக்கணமுறைப்படி பர்க்க சப்தம் ஆண்பாலாகாது, பாலற்ற நபும்ஸகமாகும். ஆகையால், ''சிவன்'' என்ற தேவன் ''உபாஸிக்கப்படுகிறான்'' என்ற பொருள் ஸம்ஸ்க்ருத வ்யாகரண சாஸ்த்ரத்துக்குப் புறம்பானது. ஒப்புக்கொள்ளமுடியாதது.

இனி, ''இந்த மந்த்ரம் நிர்க்குண ப்ரஹ்மத்தையே சொல்லுகிறது'' என்ற அத்வைதவாதத்தை ஆராய்வோம். 'தேவ' என்றும் பதம் 'லீலையால் ஆனந்திப்பவன்' என்று பொருளையுடையது. ஜகத்வ்யாபாரத்தையே இங்கு லீலை என்கிறது. ஸ்ருஷ்டி முதலியவைகளைப் பண்ணி மகிழ்பவன் என்றபடி. மகிழ்பவன் குணமில்லாதவனாயிருக்க முடியாதாகையால் நிர்க்குண ப்ரஹ்ம வாதம் ஸரியானதாகாது. 'தேவ : ஸவிதா' என்ற இரண்டும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலுள்ள பெயர்கள். ஸ்ரீ பராசரபட்டர் தம் பாஷ்யத்தில் ''தீவ்யதி க்ரீடதீதி தேவ:'' என்று கொண்டு, புலி பன்றி

போன்ற துஷ்டமிருகங்களை கயிற்றால் கட்டி விளையாடுவதுபோல மாயையாகிற பாசத்தால் ஜீவன்களைக் கட்டி விளையாடுபவன் என்று பொருளுரைக்கிறார். "மாயாம்துப்ரக்ருதீம் வித்யாத் மாயிநம்து மஹேச்வரம்" என்று உபநிஷத்து, த்ரிகுணங்களோடு கூடிய ப்ரக்ருதியினால் ஜீவன்களை ஸர்வேச்வரன் கட்டுகிறான். புலி முதலிய ம்ருகங்கள் போல ஜீவனும் துஷ்ட ஸ்வபாவமுடையவனே. ஸ்ருஷ்டி, ரக்ஷணம், ஸம்ஹாரம் இவைகளாகிற ஜகத்வ்யாபாரம் பகவானுக்கு லீலை. "அகில புவன ஜந்மஸ்தேமபங்காதி லீலே" என்று ஸ்ரீபாஷ்யத்தில் மங்களச்லோகம். "பலபல மயக்குக்களால் இன்புறும் இவ்விளையாட்டுடையானைப்பெற்று ஏதும் அல்லலிலனே" என்று மகிழ்கிறார் ஆழ்வார் (திருவாய்மொழி 3..10..7). தன்னைப்பணிந்து அடிமைசெய்து உய்யட்டும் என்று பரமபுருஷன் ஜீவனை சரீரத்துடன் சேர்த்து வைக்கிறான் ச்ருஷ்டியில். "விசித்ரா தேஹஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும்" என்கிறபடி அவனுக்கு கைங்கர்யம் பண்ணுவதற்கென்றே கொடுக்கப்பட்ட இந்த சரீரத்தைக் கொண்டு விஷயஸுகங்களில் மண்டிக் கிடக்கும் ஜீவனைப்பார்த்த அவன் எள்கி நகைக்கும்படி யாகிறது. இது ஒரு லீலை. குளிரில் வாடும் ஓர் ஏழைக்கு ஒரு ப்ரபு நல்ல சால்வையொன்றைக் கொடுக்க, அதைக்கொண்டு அவன் குளிரைப் போக்கிக் கொள்ளாமல், அதைத் துண்டு துண்டாகக் கிழித்து மூட்டையாகக் கட்டித் தோளில் மாட்டிக் கொண்டானானால், அவனைப் பித்தன் என்று பரிஹஸிக்கமாட்டார்களோ? அதேபோல் தான் ஸம்ஸாரிகள் சரீரத்தை விஷயங்களில் மண்டவிட்டுக் கார்யம் கொள்வதும். ஆக, தேவசப்தம் குணங்களோடு கூடிய பரமபுருஷனைத்தான் சொல்லுமே ஒழிய நிர்க்குண ப்ரஹ்மத்தைச் சொல்லாது.

'ஸவிதா' என்ற திருநாமம் ஆதித்யமண்டல மத்யவர்த்தியானவனும் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவனுமான பரமபுருஷனைச் சொல்லும், இதனால் காரணத்வம் சொல்லப்படுகிறது. காரணத்வமும் குணகோடியில் சேர்ந்ததே. நிர்க்குணப்ரஹ்மம் ஜகத் காரணமாக இருக்கமுடியாது. அத்வைதிகள், "காரணத்வம் தடஸ்தலக்ஷணம் மட்டுமே: குணமாகாது" என்பர். அதாவது, "ஸூரியன் வீட்டின்

தலைமேட்டுக்கு வந்து விட்டான். மணி 12 இருக்கும்'' என்றால், 'தலைமேடு' என்பது வானவெளியில் ஸூரியனிருக்குமிடத்தை அறிய உதவுமே போக்கி வீட்டின் தலைமேட்டிலேயே ஸூரியன் வந்துசேர்ந்தான் என்று ஆகாது. தலைமேட்டுக்கும் ஸூரியனுக்குமுள்ள ஸம்பந்தமே ப்ரஹ்மத்துக்கும் காரணத்வத்துக்கும் உள்ளது என்பது அத்வைதவாதம். ஆனால், ஸூரியமண்டலத்திலிருந்து கொண்டு ஸூரியன் மூலம் மழை, பயிர்பச்சை முதலியவைகளை உண்டாக்குபவனே ஸவிதா என்று ச்ருதிஸித்தமான பொருளாகையால் நிர்க்குண ப்ரஹ்மம் தான் ஸவிதா சப்தத்தின் பொருள் என்பது தகாது.

ப்ர்க்க சப்தத்தை ஸகாரந்தமாகவே கொண்டு, தேஜஸ்ஸு என்கிற பொருளையும் கொண்டு மறுபடியும் சைவர்கள் பத்யவஸ்தாநம் செய்தார்கள். அதாவது—

தேவஸ்ய பர்க்கஃ ஸ்விதுஃ பர்க்கஃ என்று விரியும்போது, பரம புருஷனுடைய தேஜஸ்ஸை என்ற பொருள் கிடைக்கும். தேவனும் தேஜஸ்ஸும் வெவ்வேறாகையால் பரமபுருஷனுடைய தேஜஸ்ஸாகக் சிவனைக்கொண்டு, காயத்ரீ சைவ மந்த்ரம் என்பர் சில சைவர்கள். இது ஸரியல்ல. ஏனெனில் எப்போதுமே 'உடைய' என்ற ஆறாம் வேற்றுமை பேதத்தைக் குறிக்கும் என்பது இல்லை. உதாரணமாக, ராஹுவே தலைவடிவமாயிருக்க, ராஹுவுடையதலை (ராஹோச்சிர:) என்ற ப்ரயோகத்தைக் காண்கிறோம். இங்கு ராஹுவுக்கும் தலைக்கும் பேதம் கிடையாது. வேற்றுமை இல்லாத வேற்றுமையை யேறிட்டுச் செல்லுமிடங்களும் உண்டு. ஸவிதுஃ என்று ஒரு உயர்ந்த தெய்வத்தைச் சொன்னதால் தெய்வம் வேறு, தேஜஸ் வேறு என்று கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை.

ஆக, தேவனே தேஜஸ்ஸாக வேணும். இந்த ஸகுணனான தேவன் ஸவிதா. இவன் யார் என்று வேதம் நமக்குக் காட்டித் தருகின்றது. தைத்திரீயத்தில் ப்ருகுவல்லியில், ''யாரிடமிருந்து எல்லாப் பொருள்களும் உண்டாகின்றனவோ யாரால் இவை உள்ளனவாகின்றனவோ, யாரிடம் இவை லயம் அடைகின்றனவோ, அவனை ப்ரஹ்மம் என்று அறிவாயாக'' என்று காட்டப்பட்டது. சாரீரக மீமாம்ஸா சாஸ்திரத்திலும், ''ஜந்மாத்யஸ்ய யதஃ'' என்று அறிவாயாக என்று காட்டப்பட்டது.

சாரீரக மீமாம்ஸா சாஸ்திரத்திலும், "ஜந்மாத்யஸ்ய யதஃ " என்ற ஸூத்ரத்தால் ஜகத்காரண வஸ்து உபபாதிக்கப்பட்டது. இந்த ஜகத்காரணமான பரப்ரஹ்மமே ஸவிதா; ஸூர்யமண்டலத்தின் அதிதேவதை. சாந்தோக்யத்தில் இந்த புருஷன் அழகாக வர்ணிக்கப்படுகிறான் "யஏஷோந் தராதித்யே ஹிரண்மயஃ புருஷஃ தஸ்ய யதாகப் யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்று. ஹிரண்மயஃ புருஷஃ என்பதனால் மிகவும் ஸ்ப்ருஹணீயன் விரும்பத்தக்க அழகன் என்றும், தஸ்ய புண்டரீகமேவமக்ஷிணீ என்பதனால் அவன் செந்தாமரைக் கண்ணன் என்றும் தெளிவாயிற்று. இது ஸ்ரீமந்நாராயணனை யொழிய வேறு தெய்வத்தைச் சொல்லாது. புண்டரீகாக்ஷத்வம் நாராயணனைத் தவிர வேறு எந்த தெய்வத்துக்கும் கிடையாது. "தேவஸ்ய ஸவிதுஃ பர்க்கஃ" என்ற சொற்றொடருக்கு "தேஜோர்மயனான ஸ்ரீமந்நாராயணனை" என்ற பொருளே ச்ருதிகளுக்கு இசைந்ததும் ஒத்துக் கொள்ளக் கூடியதும் ஆகும்.

"யஃ நஃ திய; ப்ரசோதயாத்" என்று மூன்றாவது வாக்யம். "எவன் நமது ஞானங்களைத் தூண்டி நடத்துபவனோ" என்று இதற்குப் பொருள். "ஸர்வஸ்யசாஹம் ஸ்ருதி ஸந்நிவிஷ்டஃ மத்தஃ ஸ்ம்ருதிஃ ஞாநமபோஹநம்ச" என்று கீதையில் (15-15) "ஏஷ நாராயணஃ ஸ்ரீமான்." என்று கொண்டாடப்படும் க்ருஷ்ணன் வாக்யம். ஞான உதயஸ்தானமான ஹ்ருதயத்தில் நான் இருக்கிறேன். அங்கு உண்டாகும் அறிதல், நினைத்தல், மறத்தல் எல்லாம் என்னால் ஏற்படுபவை என்கிறான் பகவான். இதனால் ஞானங்களைத் தூண்டி நடத்துபவன் நாராயணனே என்பது தெளிவாகும். காயத்ரி ஜபம் பக்தி அநுஷ்டானப்ரகாரமாக அமைந்துள்ளளது.

மூன்றாவது வாக்யம் முதலிரண்டால் கூறப்பட்ட பொருளை சிக்ஷித்துக் கொடுக்கிறது. எந்தக் கார்யமும் "நான் செய்தேன்". என்ற எண்ணத்துடன் செய்தால் பயனற்றதாக ஆகிறது "அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே" என்று கீதை (3-27). தேஹாத்மாபிமான மாகிற அஹங்காரத்தினால் விவேகத்தை இழந்த மூடன், "நான் கார்யங்களைச் செய்தேன்" என்று எண்ணுகிறான். எதைச் செய்தாலும் அவனர்ப்பணமாகச் செய்ய வேண்டும். "அத்யாத்மசேதஸா மயிஸர்வாணி கர்மாணி ஸந்யஸ்ய நிராசீஃ

நிர்மமோ பூத்வா'' என்று கர்மத்தைத் செய்பவன் நிலை இருக்க வேண்டியபடியைக் கையேடு படுத்தித் தருகிறான் க்ருஷ்ணன் (கீதை 3-30). "ஆத்மாவைப்பற்றிய உண்மை ஞானமுடையவனாய் கர்த்ருத்வத்தை என்னிடம் வைத்து பலத்தில் ஆசையில்லாமல், தன்னது என்ற எண்ணம் துளியும் கலக்காமல் இருந்து கார்யங்களைச் செய்ய வேண்டும்'' என்று பகவான் வலியுறுத்துகிறான்.

"ஒருவனை அவனதருளால் உறற் பொறுட்டு என் உணர்வினுள்ளே இருந்தினேன்; அதுவும் அவனது இன்னருளே" என்று ஆழ்வார் திருவாக்கு. (திருவாய்மொழி(8-8-3). ஒப்புயர்வற்ற அவனை அவன் ப்ரஸாதமடியாக அடைய வேணுமென்று என் ஞானத்துக்கு விஷயமாக்கினேன். (விரும்பினேன்); அந்த விருப்பமும் அவனருளால் விளைந்ததொன்றே என்று. நாம் எதைச் செய்தாலும் கோவிலுக்குச் சென்று அவனை ஸேவித்தாலும், உபஹாரங்களை (தேங்காய், பழம், புஷ்பம் முதலியவை) ஸமர்ப்பித்தாலும், கைங்கர்யம் பண்ணினாலும் எல்லாமே அவன் க்ருபையால் ஏற்பட்டவை என்ற எண்ணம் மிகவும் அவசியம். அவன் அருளால் அவனுடையதை அவனிடம் கொண்டு சேர்ப்பிக்கும் பாக்யம் கிட்டிற்றே என்று மகிழ வேண்டும். காயத்ரீ மந்த்ரத்தைச் சொல்லி சேர்ப்பிக்கும் பாக்யம் கிட்டிற்றே என்று மகிழ வேண்டும். காயத்ரீ மந்த்ரத்தைச்சொல்லி பரமபுருஷனைத் த்யானிக்கும்போது, த்யானம் அவன் அருளால் தூண்டுதலால் ஏற்பட்டது என்ற தெளிந்த ஞானத்துடனும் (நன்றி உணர்ச்சியுடனும்) த்யானிக்கக் கடவோம். அப்போதுதான் "த்யாத்வா தேவம் ஜபேத் மநும்" என்ற ஆஜ்ஞை நிறைவேற்றப்பட்டதாக ஆகும்.

காயத்ரீ ஜபத்தில் புருஷோத்தமனான நாராயணனை அன்புடன் த்யானிப்பதுதான் முக்யமான கார்யம். இந்த த்யானத்தை அவன் தூண்டி நடத்தினான்; இது அவனர்ப்பணம் என்ற மனோபாவம் மிகவும் முக்கியமாகும்.

* * * * *